**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மேல்நிலைக்கல்வி - தொழிற்கல்வி – சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேராணை மனுக்கள் எண். 9780/95 மற்றும் 14027/96 ஆகியவைகளின் மீது 8.7.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு- பணிவரன்முறை செய்யப்பட்ட 10 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பின்னேற்பு, 10.6.2002 முதல் தொழிற் கல்வி ஆசிரியர் நிலை-1ஆக பட்டதாரி ஆசிரியர் சம்பள விகிதத்தில் பணியாற்றி வரும் 191 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பணிவரன்முறைப் படுத்துதல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்(விஇ)துறை**

அரசாணை (நிலை) எண்.71 நாள் 18.03.2010

திருவள்ளுவராண்டு 2041

பங்குனி – 4.

படிக்கப்பட்டவை:-

1. நீதிப்பேராணை மனுக்கள் எண்.9780/95 மற்றும் 14027/96ல் பிறப்பிக்கப்பட்ட 8.7.2004 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற ஆணைகள்.
2. அரசாணை (நிலை) எண் 69 , பள்ளிக் கல்வி, நாள் 20.3.2007.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித எண்.5046/வி1/இ1/03, நாள்.29.11.2007. 2.1.2008,2.2.2008, 12.4.08, 27.9.08, 6.1.09 மற்றும் 8.5.2009.

----

**ஆணை:-**

சென்னை, உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனுக்கள் எண்.9780/95 மற்றும் 14027/96ல் வழங்கப்பட்ட தீர்ப்புக்கிணங்க 1049 இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்திலுள்ள, தொழிற் கல்வி ஆசிரியர்கள் நிலை-2 பணியிடங்களை மட்டும் பட்டதாரி ஆசிரியர் ஊதிய விகிதத்திலுள்ள தொழிற் கல்வி ஆசிரியர் நிலை-1 பணியிடங்களாக நிலை உயர்த்தி அவர்களுக்கு 8.7.2004ஆம் நாளிட்ட சென்னை உயர்நீதி மன்ற ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் கருத்தியலான ஊதிய உயர்வுகள் கணக்கிட்டு உயர்நீதி மன்ற ஆணை பிறப்பிக்கப்பட்ட 8.7.2004 முதல் பணப்பயன் வழங்கிட மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேற்கண்ட நீதிப்பேராணை மனுக்கள் 9780/95 மற்றும் 14027/96-ல் 8.7.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் அரசாணை(நிலை) எண். 69, பள்ளிக் கல்வி, நாள் 20.3.2007ல் பதவி உயர்வு பெற்ற 201 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை 2 பணியிடங்களில் ஏற்பட்ட காலியிடத்தில் புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், அரசாணை (நிலை)எண்.69, பள்ளிக் கல்வி, நாள் 20.3.2007ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் பலனை 10.6.2002 முதல் தொழிற்கல்வி ஆசிரியர் நிலை-I ஆக பணியாற்றி வரும் 201 நபர்களுக்கு வழங்க இயலாமற் போனது எனவும், மேற்கண்ட 201 தொழிற்கல்வி ஆசிரியர்களில் 10 பேர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும் பொருட்டு இவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்டு, கருத்தியலான ஊதிய உயர்வுகள் பெறவும் 8.7.2004 முதல் பணப்பயன்கள் பெறவும் ஆணையிடப்பட்டது எனவும், எனவே 10

தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பின்னேற்பும், மீதமுள்ள 191 ஆசிரியர்களுக்கு பணிவரன்முறை செய்து, கருத்தியலான ஊதிய உயர்வு வழங்கி நீதிமன்ற தீர்ப்பாணை நாளான 8.7.2004 முதல் பணப்பயன் பெறுவதற்கு உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, சென்னை உயர்நீதி மன்ற நீதிப்பேராணை மனுக்கள் 9780/95 மற்றும் 14027/96-ல் 8.7.2004 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கனவே அரசாணை(நிலை) எண். 69, பள்ளிக் கல்வி, நாள் 20.3.2007ல் வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலும், பணிவரன்முறை செய்யப்பட்ட 10 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு பின்னேற்பும், மீதமுள்ள 191 ஆசிரியர்களின் பணியினை வரன்முறை செய்து, கருத்தியலான ஊதிய உயர்வு வழங்கலாம் எனவும் நீதிமன்ற தீர்ப்பாணை நாளான 8.7.2004 முதல் பணப்பயன் வழங்குவதால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் மேற்கொள்ள ஆணை வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும் 201 தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு 10.6.2002 முதல் 7.7.2004 வரை உள்ள காலங்களில் பட்டதாரி ஆசிரியர் ஊதிய விகிதத்தில் அளிக்கப்பட்ட தொகையினை சார்ந்த ஆசிரியர்களிடமிருந்து பிடித்தம் செய்து சம்பந்தப்பட்ட கணக்கில் செலுத்துமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 3-ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>அரசு பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

2202 பொதுக் கல்வி 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் I திட்டத்தில் சேராதது AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் 01- சம்பளங்கள் (த.தொ.கு 2202-02-109-AA-0108)

<u>நகராட்சி / மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

2202 பொதுக் கல்வி 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் I திட்டத்தில் சேராதது AB நகராட்சி, மாநகராட்சி, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளங்கள் 01- சம்பளங்கள் (த.தொ.கு 2202-02-109-AB-0106)

<u>உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

2202 பொதுக் கல்வி 02 இடைநிலைக் கல்வி – 110 அரசு சாரா இடைநிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி I திட்டத்தில் சேராதது AA அரசு மான்யம் பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி 79- சம்பள மான்யங்கள் (த.தொ.கு 2202-02-110-AA-7902)

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.13602/நிதி(கல்வி-II)/2010 நாள் 17.3.2010-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
மாநிலக் கணக்காயர், சென்னை-18 / 35
ஆணையர், கருவூலம் (ம) கணக்குத்துறை, சென்னை-15
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-15/35/79
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
<u>நகல்</u>
நிதி (கல்வி-II மற்றும் வரவு செலவு-II)த்துறை, சென்னை-9
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சரின்
முதுநிலை உதவியாளர், சென்னை-9.
(இணைய தளம்)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.